**O.S.No.44/2013**

**Date:06.07.2018**

2ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்படும்
பிரதிவாதி தரப்பு சாட்சி 1 - போஜன், த-பெ,

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

முதல் விசாரணை

நான் பிரதிவாதி தரப்பு 1வது சாட்சி. எனது தரப்பு சாட்சியத்தை முதல் விசாரணை வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மை என உறுதி கூறி கையெழுத்துச் செய்துள்ளேன். எனது தரப்பில் ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. வாதியின் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

வாதியின் வழக்கு விபரங்கள், பிரதிவாதிகளின் எதிர்வழக்குரை விபரங்கள் தெரியுமா என்றால் தெரியும். 2ம் பிரதிவாதி என் மனைவி என்றால் சரிதான். தாவாச் சொத்து நான் கிரையம் வாங்குவதற்கு முன்பாக ஆதியில் அழகர்சாமி நாயுடு என்பவருக்கு 1920ல் பாத்தியப்பட்டிருந்தது என்றால் சரிதான். அதற்கான பத்திரம் என்னிடம் காட்டப்படுவது என்றால் சரிதான். அது பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதன் பின்னர் 1959ல் எனக்கு கிரயம் கொடுத்த ராஜு நாயுடுவுக்கு அழகர்சாமியின் குமாரர் கிரயம் கொடுத்த கிரய ஆவணம் என்னிடம் காட்டப்படுவது என்றால் சரிதான். அது பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதன் பின்னர் 15.10.2013ல் என் மனைவி பெயரில் ஏற்பட்ட கிரய ஆவணம் என்னிடம் காட்டப்படுவது என்றால் சரிதான். அது பி.வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதன் பின்னர் என் மனைவி 2006ல் 3ம் பிரதிவாதிக்கு கிரயம் கொடுத்த கிரய ஆவணத்தின் சான்றிட்ட நகல் என்னிடம் காட்டப்படுவது என்றால் சரிதான். அது பி.வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதன் பின்னர் 2007ம் ஆண்டு 5ம் பிரதிவாதி பெயரில் ஏற்படுத்தப்பட்ட கிரைய ஆவணம் என்னிடம் காட்டப்படுவது என்றால் அது பற்றி தெரியாது. என் மனைவி கிரையத்திற்குப் பின்னர் என் மனைவிதான் தாவாச் சொத்தை அனுபவம் செய்து வந்துள்ளார் என்றால் சரிதான். ஆனால் என் மனைவியின் கிரையத்திற்குப் பின்னர் வாதி அனுபவம் செய்து வந்ததாக வாதி பொய்யாகச் சொல்கிறார் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. என் மனைவி கிரையம் வாங்கிய பின்னர் வாதி அனுபவம் செய்து வந்துள்ளார் என்றால் அவர்தான்

அனுபவம் செய்து வந்துள்ளார். கிரயத்திற்குப் பின்னர் என் மனைவி பெயரில் பட்டா ஏற்பட்டு, தீர்வை ரசீது செலுத்தி வந்துள்ளோம் என்றால் சரிதான். நான் கிரையம் கொடுக்கும் வரை பட்டா மற்றும் தீர்வை ஆகியவை என் மனைவி பெயரில் இருந்தது என்றால் சரிதான். தாவாச் சொத்தை என் மனைவி கிரையம் பெற்றது முதல் என் மனைவியின் அனுபவத்தில் இருந்தது என்றாலும், நான் வழக்கிற்காக பொய்யாகச் சொல்கிறேன் என்றாலும், இல்லை, என் மனைவியின் அனுபவத்தில்தான் இருந்தது.